செ.வெ.எண்: 351 நாள்: 8.5.2020

**விவசாயிகள் உழவன் செயலி மூலம் வேளாண் பொருட்களை விற்பனை செய்து பயன் பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

விவசாயிகள் உழவன் செயலி மூலம் வேளாண் பொருட்களை விற்பனை செய்து பயன் பெறலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்ய உதவும் உழவன் செயலியில் உள்ள உழவன் ”இ” சந்தை என்னும் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை மூலம் உழவன் செயலி உருவாக்கப்பட்டு அதன்மூலம் 18 விதமான சேவைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதில் விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்ய உதவும் உழவன் ”இ” சந்தை என்னும் புதிய சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை மூலம் தாங்கள் விளைவித்த விளைபொருட்களை விற்க விரும்பும் விவசாயிகளும், மாவட்ட வாரியாக விளைபொருட்களை வாங்க விரும்பும் வியாபாரிகளும் பதிவு செய்து கொள்ளலாம். பயிர் வாரியாக விற்பனை செய்ய உள்ள விளைபொருட்களை வியாபாரிகள் இச்செயலியின்

மூலம் பார்த்து விருப்பம் தெரிவிக்கலாம். வியாபாரிகளின் தொலைபேசி எண் உள்ளிட்ட விவரம் விவசாயிகளுக்கு உழவன் செயலி வாயிலாகவே தெரிவிக்கப்படும். இந்த சேவையினை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**